செ.வெ.எண்40/2017 நாள்:14.09.2017

**சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.க.லதா,இ.ஆ.ப.. அவர்கள் தலைமையில் வடகிழக்கு பருவ மழை தொடர்பாக மாவட்ட அளவிலான முன்னேற்பாடு ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.**



சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.க.லதா,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் வடகிழக்கு பருவ மழை தொடர்பான முன்னேற்பாடு ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.து.இளங்கோ மற்றும் அனைத்துத்துறை அரசு அலுவலர்கள் உள்ளனர்.

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் (14.09.2017) இன்று மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.க.லதா,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் வடகிழக்கு பருவ மழையின் போது மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு பணிகள், முன்னேற்பாடு பணிகள் குறித்து மாவட்ட அளவிலான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது தெரிவித்ததாவது, வடகிழக்கு பருவமழை பொதுவாக தமிழகத்தில் அக்டோபர் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை பெய்து வருகிறது. 48 சதவிகிதம் மழை அளவு இந்த மாதங்களில் எதிர்பார்க்கப்படும். இந்த ஆண்டு வடகிழக்கு பருவமழை துவங்கவுள்ளதால், வட்டாட்சியர் அலுவலகங்களில் இயங்கும் மழைமானிகள் சரியான நிலையில் இயங்குகின்றனவா என்பது குறித்து வட்டாட்சியர்கள் ஆய்வு செய்து மழையளவினை தினசரி தவறாது மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பிட வேண்டும். வருவாய் கோட்டாட்சியர்கள், வட்டாட்சியர்கள் தங்கள் ஆளுகைக்குட்பட்ட பகுதியில் உள்ள நீர்நிலைகளின் கரைகள் பலமாக உள்ளனவா, உடைப்புகள் ஏதும் உள்ளனவா என்பதை வருவாய் ஆய்வாளர்கள், மண்டலத் துணை வட்டாட்சியர்கள் மற்றும் வட்டாட்சியர்களே தல ஆய்வு செய்து கரைகள் பலப்படுத்த வேண்டிய இனங்கள், உடைப்புகள் அடைக்கப்பட வேண்டிய இனங்கள் ஏதேனுமிருப்பின் அவற்றை பட்டியலிட்டு பொதுப்பணித் துறை (நீர்வள ஆதார அமைப்பு) / ஊரக வளர்ச்சி மூலம் உடன் செப்பனிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கண்மாய், கால்வாய் உடைப்பு சம்மந்தமான தகவல்கள் மற்றும் கண்மாய்களில் வெள்ளப் பெருக்கின் போது உள்ள நீரின் அளவு ஆகியவற்றை தெரிவிக்குமாறு பொதுப்பணித் துறையினருக்கும், சாலை சேதமடைதல் தொடர்பான நிகழ்வுகளை நகராட்சி மற்றும் நெடுஞ்சாலைத் துறையினர் உடனுக்குடன் தகவல் தெரிவிக்க வேண்டும். கடந்த ஆண்டுகளில் வடகிழக்கு பருவமழை காலங்களில் பழுதடைந்த சாலைகள் மற்றும் கண்மாய்கள் தற்போது நல்ல நிலையில் உள்ளனவா என சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் அந்தந்த இடங்களுக்குச் சென்று கண்காணிக்க

வேண்டும். அவ்விடங்.களில் பழுதுகள் ஏதும் இருக்குமாயின் உடன் சரிசெய்திட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வடகிழக்கு பருவமழை காலத்தில் தேவைப்படும் போது காவல்துறை மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்களிடம் உள்ள "கம்பியில்லா தந்தி" (Wireless) கருவியினை பொதுமக்களும், அலுவலர்களும் பயன்படுத்திக் உடனுக்குடன் நிகழ்வுகளை தெரிவிக்க வேண்டும். மாவட்டத்தில் வைகையாற்றுப் படுகையில் தாழ்வான பகுதியில் உள்ளவர்களை இயற்கை பேரிடர் மற்றும் மழை வெள்ளம் ஏற்படும் சமயத்தில் தங்க வைப்பதற்கு பாதுகாப்பான தற்காலிக நிவாரண மையங்களில் தங்க வைத்தும், பராமரித்தும் அவர்களுக்கான நிவாரணங்கள் வழங்கிட நல்ல நிலையில் உள்ள பள்ளிக் கட்டிடங்கள், சமுதாயக் கூடங்கள், திருமண மண்டபங்கள் அகியவற்றை கண்டறிந்து வருவாய்த்துறை அலுவலர்கள், வளர்ச்சித் துறை அலுவலர்கள் தயார் நிலையில் வைத்துக் கொள்ள வேண்டும்.

ஊரக வளர்ச்சி துறையினர் மற்றும் பொதுப்பணித் துறையினர் தத்தமது கட்டுப்பாட்டில் உள்ள கண்மாய்க் கரைகள் பலமாக இருப்பதை உறுதி செய்து கொள்வதுடன் திடீர் வெள்ளத்தால் ஏற்படும் உடைப்புகளைச் சரிசெய்யத் தேவையான மணல் மூடைகளைத் தயாராக வைத்திருக்கவும், நெடுஞ்சாலைத் துறையினர் சாலைச் சேதங்களைத் தவிர்க்கத் தேவையான ஆய்வு மற்றும் ஆயத்த வேலைகளை மேற்கொள்ள வேண்டும். பாசன வாய்கால்கள் / கழிவு நீர் வழிந்தோடும் வாய்க்கால்கள் ஆகியவற்றில் தூர் எடுக்கப்பட வேண்டிய நேர்வுகளில் தூர்வாரும் பணி உடனுக்குடன் முடிக்கப்பட வேண்டும். கிராம சபைக் கூட்டங்களில் பேரிடர் தடுப்புத் தொடர்பான நடவடிக்கைகளை பொதுமக்களுக்கு தெரிவித்து, அதற்குரிய விழிப்புணர்வை ஏற்படுத்துமாறு ஊரக வளர்ச்சி துறை அலுவலர்கள் பணி மேற்கொள்ள வேண்டும்.

பொது சுகாதாரத் துறையினர் மருந்துகள் மற்றும் தொற்று நோய் தடுப்பு ஊசிகளை போதுமான அளவு கையிருப்பு வைத்துக் கொள்ள வேண்டும். வடகிழக்குப் பருவ மழையின் போது மக்களுக்கு பொது விநியோகத் திட்டத்தின் கீழ் தங்கு தடையின்றி அத்தியாவசிய உணவுப் பொருள் வழங்கும் பொருட்டு உணவுப் பொருள் துறையினர் போதுமான அத்தியாவசியப் பொருட்களை இருப்பில் வைத்துக் கொள்ள வேண்டும். பொதுபணித் துறை, ஊரக வளர்ச்சி, பேரூராட்சித் துறை, நகராட்சி நிர்வாகத் துறை தற்காலிக நிவாரண மையங்களாக பயன்படுத்தப்படவுள்ள பள்ளிகளைத் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். வெள்ளப் பெருக்கு காலங்களில் ஆறுகளில் தண்ணீர் அதிகளவு உள்ள போது தவறி விழுபவர்களை மீட்கும் பொருட்டு நன்கு நீச்சல் பயிற்சி பெற்ற நபர்களை தயார் நிலையில் வைத்திருக்க மீன்வளத் துறையினர் பணிகள் மேற்கொள்ள வேண்டும்.

கால்நடை பராமரிப்புத் துறையினர் கால்நடைகளுக்கான தொற்று நோய் தடுப்பு மற்றும் பராமரிப்புக்கான மருந்துகளை போதுமான அளவு இருப்பு வைத்துக் கொள்ள வேண்டும். தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித்துறையினர் மீட்பு நடவடிக்கைகளுக்குத் தேவையான உபகரண்களுடன் தயார் நிலையில் இருந்திட வேண்டும். குறிப்பாக, அனைத்துத் துறை அலுவலர்கள் அவரவர் பணியிடங்களில் தவறாது தங்கி இருந்து பணியாற்ற வேண்டும் எனவும், கடந்த காலங்களில் வெள்ளப் பெருக்கு காரணமாகப் பாதிப்புக்குள்ளான பகுதிகளில் தற்பொழுது தனிக் கவனம் செலுத்த வேண்டும்.

மழை வெள்ளப் பெருக்கின் போது சாலைகள் மற்றும் பொது இடங்களில் பழுதடைந்துள்ள மின்கம்பிகளை உடன் சரிசெய்யுமாறும், மின் விநியோகம் பாதிக்கப்பட்ட இடங்களில் உடன் மின் இணைப்பு வழங்கிடவும் மின்வாரியத் துறையினர் தயார் நிலையில் இருந்திட வேண்டும். மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள **"பேரிடர் மேலாண்மை கட்டுப்பாட்டு அறை"** 24 மணி நேரமும் இயங்கும் எனவும், பொதுமக்கள் பேரிடர் தொடர்பான விபரங்களை **"1077"** என்ற கட்டணமில்லாத தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு தகவல் அளிக்கலாம் என்றும், மாவட்ட நிர்வாகத்தின் செயல்பாடுகள் முடுக்கிவிடப்பட்டுள்ளதாகவும், அனைத்துத்துறை அலுவலர்கள் ஒருங்கிணைந்து செயல்பட்டு வரக்கூடிய பருவமழை காலத்தில் ஏற்படும் பிரச்சனைகளை சமாளிப்பதற்கு தயார் நிலையில் இருக்குமாறும் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.க.லதா,இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.து.இளங்கோ, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.காஞ்சனா, மாவட்ட பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலை, நீர்வள ஆதார உயர் அலுவலர்கள், வருவாய் கோட்டாட்சியாகள்,நகராட்சி ஆணையாளர்கள், வட்டாட்சியர்கள் மற்றும் அனைத்துத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

::வெளியீடு:: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், சிவகங்கை.